வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com

மலர் : 06 13.10.2025 திங்கட்கிழமை இதழ் : 286 பக்கங்கள் : 08




# தோட்டத் தொழிலாளருக்கு நாளாந்த வேதனம் ரூ.1,750

## இந்த ஆண்டுக்குள் நடைமுறையாகும் என்கிறார் ஜனாதிபதி



பண்டாரவளை, ஒக்ரோபர் 13

**தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளம் இந்த வருடத்துக்குள் 1,750 ரூபாயாக உயர்த்தப்படும் என்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.**

பதுளை - பண்டார வளையில் நேற்று நடைபெற்ற மலையக மக்களுக்கு வீட்டு உறுதிகளை வழங்கும் நிகழ்வில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மலையக சமூகம் நாட் டுக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை செய்துள்ளது. அத்துடன், இரண்டு நூற்றாண்டுகளுக்கும் மேலாக கடினமான சூழ்நிலையில் வாழ்ந்து வருகிறது. அவர்களுக்கு அடிப் படைத் தேவைகள், கண்ணிய மான வாழ்க்கை கிடைப்பதை

07



## உலக சுகாதார நிறுவனத்தின் இயக்குநர் நாட்டுக்கு வருகை

கொழும்பு, ஒக். 13

உலக சுகாதார நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் டெட்ரொஸ் அதனொம் கேப்ரியஸஸ் நாட்டுக்கு வருகை தந்துள்ளார்.

8ஆவது தென்கிழக்கு ஆசிய பிராந்திய சர்வதேச சுகாதார உச்சி மாநாட்டில் விருந்தினராக பங்கேற்பதற்காகவே அவர் நேற்றையதினம் நாட்டுக்கு வருகை தந்தார்.

நேற்று காலை 9.40 மணியளவில் கட்டார் விமான சேவைக்கு சொந்தமான கியூ. ஆர். 660 விமானத்தின் ஊடாக கட்டுநாயக்கா விமான நிலையத்தை

07



## மலையகத்தில் 2,000 பேருக்கு வீட்டு பத்திரம் வழங்கி வைப்பு

பண்டாரவளை, ஒக். 13

மலையகத்தில் 2 ஆயிரம் குடும்பங்களுக்கு வீட்டு பத்திரங்கள் நேற்று வழங்கி வைக்கப்பட்டன.

பதுளை - பண்டாரவளை பொது விளையாட்டு மைதானத்தில் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந்திய நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் 10 ஆயிரம் வீட்டு திட்டத்தின் நான்காவது

07

## இந்திய பூர்வீக தமிழருக்கான ஆதரவு எப்போதும் தொடரும்

### இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா

பண்டாரவளை, ஒக். 13

இந்திய பூர்வீக தமிழர் சமூகத்துக்கான ஆதரவு எப்போதும் தொடரும். வீடுகள் மட்டுமல்ல, எதிர்காலத்தை கட்டி எழுப்புவதும் எமது இலக்கு - இவ்வாறு இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.

நேற்று பண்டாரவளையில் நடைபெற்ற இந்திய வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 2 ஆயிரம்

07

### சகல எதிர்க்கட்சிகளும் இணைந்து

## அரசாங்கத்துக்கு எதிராக நவம்பர் 11இல் போராட்டம்

கொழும்பு, ஒக். 13

அரசாங்கத்துக்கு எதிராக சகல எதிர்க்கட்சிகளும் இணைந்து எதிர்வரும் நவம்பர் 11ஆம் திகதி பேரணி ஒன்றை நடத்தவுள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசிய கட்சி ஒன்றிணைந்த அரசியல் பயணத்துக்கு ஒப்புதல் அளித்துள்ள நிலையில் இந்த எதிர்ப்பு பேரணிக்கு கூட்டு இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

இதேநேரம், சிறீ லங்கா பொதுஜன பெரமுன,

07



## பிரம்படி படுகொலையின் 38ஆவது நினைவேந்தல்!

- த.பிரதீபன் -

யாழ்ப்பாணம், ஒக். 13

இந்திய அமைதிப் படையினரால் கொக்குவில் - பிரம்படியில் படுகொலை செய்யப்பட்ட பொதுமக்களின் 38ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

பிரம்படி வீதி ஆரம்பிக்கும் இடத்தில் ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள நினைவுத்தூபியில் இந்த நினைவேந்தல் நேற்று காலை 9 மணிக்கு

07

### இலங்கையின் பொறுப்புக்கூறல் திட்டம்:

## ரூ.110 கோடி நிதி கோருகின்றது ஐ.நா. மனித உரிமைகள் பேரவை

ஜெனிவா, ஒக். 13

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை 2025 ஒக்ரோபர் முதல் 2027 செப்ரெம்பர் வரையிலான இலங்கையின் பொறுப்புக்கூறல் திட்டத்துக்கு நிதியளிக்க 38 இலட்சம் அமெரிக்க டொலரை - சுமார் 110 கோடி இலங்கை ரூபாய் கோரியுள்ளது.

திட்டச் செலவுகள் பயண செலவுகள், புதிய ஆட்சேர்ப்புகள், பயணங்களின்போது உள்ளூர் விளக்கம் தொடர்பான ஒப்பந்த சேவைகள், செயற்கைக்கோள் படம் பகுப்பாய்வு போன்றவற்றை

07

## சங்குப்பிட்டி பாலமருகே இளம்பெண்ணின் சடலம்

கிளிநொச்சி, ஒக். 13

பூநகரி - சங்குப்பிட்டி பாலம் அருகே இளம் பெண்ணின் சடலம் நேற்று ஞாயிற்றுக்கிழமை மீட்கப்பட்டது.

குறித்த பெண் ஒரு சில நாட்களுக்கு முன்னர் உயிரிழந்திருக்கலாம் என்றும் சுமார் 20 முதல் 25 வயதுக்கு உட்பட்ட பெண்ணின் சடலமே

07

## கடல் கண்காணிப்புக்கு ராடர் அவசியம் தேவை!

### வடக்கு கடற்படை தளபதி

- த.பிரதீபன் -

யாழ்ப்பாணம், ஒக். 14

போர் முடிந்து விட்டது என்பதற்காக கடல் கண்காணிப்பு நடவடிக்கைகளை நிறுத்தவோ - வேண்டாம் என்றோ சொல்ல முடியாது என்று வடக்கு கடற்படை கட்டளை தளபதி ரியர் அட்மிரல் புத்திக

07

## வவுனியாவை சேர்ந்த இருவர் குருநாகல் விபத்தில் உயிரிழப்பு

கொழும்பு, ஒக். 13

குருநாகலில் லொறி கவிழ்ந்து ஏற்பட்ட விபத்தில் வவுனியா, நெடுங்கேணியை சேர்ந்த இருவர் உயிரிழந்தனர்.

இந்த விபத்து குருநாகல் - நாரம்மல லஹிட்டியாவ, ஹொரம்பாவ - மாவி எல வீதியில் நேற்று அதிகாலை இடம்பெற்றது.

சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த லொறி

07

## நீக்கிய பாதுகாப்பை மீள வழங்குவது ஏன்?

### மகிந்த ராஜபக்ஷ கேள்வி

கொழும்பு, ஒக். 13

"எனக்கு வழங்கிய பாதுகாப்பை நீக்கிய அரசாங்கம் மீண்டும் அதனை வழங்க முடிவு செய்தது ஏன் என்பது ஒரு கேள்வி", என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

"எங்களுக்கு மீண்டும் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்றால், எங்கள் பாதுகாப்பு ஏன் நீக்கப்பட்டது? அதுவும் எங்களுக்கு ஒரு

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவு மாவட்டமும் பறிபோகும் அபாய நிலையில்

## ரவிகரன் எம். பி. தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஒக். 13

தமிழர் பிரதேசங்கள் தற்போது சிங்கள பெயர்களாக மாற்றப்பட்டுள்ளன. உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாத பட்சத்தில் முல்லைத்தீவு் மாவட்டமும் பறிபோகும் வாய்ப்புள்ளது என்று பாராளு மன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

வானொலி ஒன்றுக்கு அவர் அளித்த நேர்காணலிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், கடந்த நான்கு வருடங்களுக்குள் முல்லைத்தீவில் சனத்தொகை குறைந்துள்ளது. தொழில் ஒன்றை நேர்த்தியாக செய்ய முடியாத நிலையிலேயே மக்கள் இடம்பெயர்ந்து வெளிநாடுகளுக்கு செல்கின்றனர் - என்றும் அவர் கூறினார்.

# ஆசிரியர் இடமாற்ற நடவடிக்கையில் சுயநல செயல்கள் கவலை தருகிறது

## இலங்கை ஆசிரியர் சேவை சங்கம்

யாழ்ப்பாணம், ஒக். 13

வடக்கு மாகாண கல்வி திணைக்களத்தால் சமீபத்தில் வெளியிடப்பட்ட சேவையின் தேவை கருதிய ஆசிரியர் இடமாற்றப் பட்டியலில் இடம் பெற்றுள்ள சில நடவடிக்கைகள் அதனுடன் தொடர்புடைய சுயநல செயல்பாடுகள் குறித்து தாம் கவலை கொள்வதாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் தெரிவித்துள்ளது.

அந்த சங்கத்தின் உப செயலாளர் காரளசிங்கம் பிரகாஷ் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்ட விடயத்தைத் தெரிவித்தார்.

மேலும், "இறுதியாக வடக்கு மாகாண கல்வி திணைக்களத்தால் வெளியிடப்பட்ட இடமாற்றப்பட்டியலில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள ஆசிரியர்கள், உரிய நிர்வாக நடைமுறைக்கேற்ப, தங்களுடைய மேன்முறையீடுகளை அதிபர் ஊடாக வலயம் அல்லது மாகாண கல்வி திணைக்களத்துக்கு சமர்ப்பித்து தீர்வைப் பெற முடியும். ஆசிரியர்களுக்கான நியாயத்தைப் பெற்றுத்தர இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் எப்போதும் முன்னின்று செயல்படும்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடன் தொடர்புடைய இலங்கை ஆசிரியர் சங்கத்தின் முக்கிய பதவியாளர் ஒருவர் தனது சகோதரிக்காக தன்னிச்சையாக செயல்பட்டு, பொய்யான கருத்துகளை பரப்பி ஆசிரியர்களை தவறாக வழி நடத்த முயற்சித்துள்ளார். இதனால் ஆசிரியர்களும் மாணவர்களும் பாதிக்கப்படுகின்றனர்.

இவ்வாறான செயல்கள் வடக்கு மாகாண கல்வியை சீரழிக்கும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்படுகிறது. கல்வி அமைப்பின் நம்பகத்தன்மையை பாதிக்கிறது என்றும் அவர் கூறினார்.

அத்துடன், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதி ஒருவர், மேற்படி சகோதரியின் இடமாற்றத்தை இரத்துச் செய்யுமாறு கோரிக்கை விடுத்து முரண்பட்ட நிலையில் இடமாற்ற சபையிலிருந்து வெளிநடப்பு செய்தமை கவலைக்குரிய விடயமாகும். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தைவிட குடும்ப நலனை முன்னிலைப்படுத்தும் இவ்வாறான சுயநல நடவடிக்கைகளை எங்கள் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது - என்றார். (ஐ-03)

# சேதமடையும் வாணர் பாலம் புனரமைக்குமாறு கோரிக்கை



யாழ்ப்பாணம், ஒக். 13

சுமார் 5 கிலோ மீற்றர் நீளமான புங்குடுதீவு வாணர் தாம்போதி கடற்பாலம் இரு மருங்கும் மோசமாகச் சேதமடைந்து வருகிறது.

புங்குடுதீவுக்கு மாத்திரமன்றி நயினாதீவு, நெடுந்தீவுக்கு பயணிப்போருக்கு இந்தப் பாலமே ஒரே தரைவழி மார்க்கமாகும்.

நாளாந்தம் ஏராளமானவர்கள் இந்தப் பாலம் ஊடாகப் பயணிக்கின்றனர். இந்த நிலையில், மாரிகாலம் ஆரம்பித்துள்ளது. இந்த நிலையில், வீதி அபிவிருத்தி அதிகார சபை விரைவாக இந்தப் பாலத்தை புனரமைக்க வேண்டும் என்று மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஐ)

# பத்து பேரின் உயிரை பறித்த எலிக்காய்ச்சல்

அநுராதபுரம், ஒக். 13

அநுராதபுரம் மாவட்டத்தில் எலிக்காய்சல் நோயால் 10 பேர் உயிரிழந்ததாக தொற்று நோய் பிரிவின் மருத்துவ அதிகாரி தேஜன சோமதிலக்க தெரிவித்தார்.

2024 மற்றும் 2025 ஆண்டுகளில் அநுராதபுரம் மாவட்டத்தில் வருடந்தோறும் 300 இற்கும் அதிகமான எலிக்காய்சல் நோயாளிகள் பதிவாகின்றனர்.

அதிகமான நோயாளர்கள் அநுராதபுரம் மாவட்டத்தின் ஹெப்பிட்டிகொள்ளாவ பிரதேச செயலாளர் பிரிவிலேயே பதிவாகியுள்ளனர்.

இதில், நாச்யாதுவ, நொச்சியாகம, விளச்சிய, திறப்பனை, இபலோகம, தலாவ, தம்புத்தேகம, இராஜாங்கனை, மதவாச்சி உள்ளிட்ட பிரதேச செயலாளர் பிரிவுகளிலேயே எலிக்காய்சல் நோயால் பத்து பேர் உயிரிழந்தனர். (எ)

# கல்வியங்காடு இ.த.க. பாடசாலை பெயரை மாற்றுவதற்கு எதிர்ப்பு

யாழ்ப்பாணம், ஒக். 13

கல்வியங்காடு இந்து தமிழ் கலவன் பாடசாலையின் பெயரை நல்லூர் சைவத் தமிழ்க் கலவன் பாடசாலை என மாற்றும் முயற்சிக்கு அந்தப் பகுதி மக்கள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் மக்கள் கருத்தறியும் கூட்டத்துக்கு நேற்றைய தினம் பாடசாலையின் அதிபரால் நடத்தப்பட்டது.

இது தொடர்பான அழைப்பில், இதன்போதே, பாடசாலையின் பெயரை யாழ். நல்லூர் சைவத் தமிழ்க் கலவன் பாடசாலை என பெயர் மாற்றம் செய்யவேண்டும் என்று முதியோர் அமைப்பு கோரியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கு அந்தப் பகுதியை சேர்ந்த மக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். இதேநேரம், பாடசாலையின் பெயரை மாற்றினால் இனி வருங்காலங்களில் ஒத்துழைப்புகளை வழங்கப் போவதில்லை என்று பாடசாலையின் பல்வேறு தேவைகளுக்காக தொடர்ந்தும் நிதி உதவிகளை வழங்கிவரும் கல்வியங்காடு கனடா வாழ் மக்கள் ஒன்றியம் பாடசாலைக்கு அறிவித்துள்ளது.

இதேவேளை, தமது எல்லை பகுதிகளில் காணப்படும் விளம்பர பலகைகளில் கல்வியங்காடு என்ற பெயரை நீக்கி நல்லூராக பயன்படுத்துமாறு நல்லூர் பிரதேச சபை செயலாளரால் கடிதங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வெள்ளை பிரம்பு தினம் 'கருவி'யில் கடைப்பிடிப்பு



யாழ்ப்பாணம், ஒக். 13

உலக வெள்ளைப் பிரம்பு தினம் கருவி நிறுவனத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்பட்டது. தீவகம் லயன்ஸ் கழகத்துடன் இணைந்து இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

ஒவ்வொரு வருடமும் ஒக்ரோபர் 15ஆம் திகதி சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.

இதனையொட்டியே நேற்றைய தினம் கருவி நிறுவனத்தில் வெள்ளைப் பிரம்பு தினம் கொண்டாடப்பட்டது. இதன்போது, கருவி நிறுவன பயனாளிகளுக்கு வெள்ளைப் பிரம்புகள் அன்பளிப்பு செய்யப்பட்டன. (ஐ)

# 9 நாட்களில் 46,868 சுற்றுலாவிகள்!

கொழும்பு, ஒக். 13

நடப்பு மாதத்தின் முதல் 09 நாட்களில் 46,868 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என்று

சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்தியாவிலிருந்தே அதிகளவான சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளனர். அங்கிருந்து, 14 ஆயிரத்து 221 சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

இதே காலப்பகுதியில் சீனா, பிரித்தானியா, ஜேர்மன், பங்களாதேஷ், அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் இருந்தும் அதிக எண்ணிக்கையிலான சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதற்கமைய இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் நாட்டுக்கு வருகை தந்துள்ள மொத்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 17 இலட்சத்து 72 ஆயிரத்து 362 என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. (ஐ)







யாழ்ப்பாணம் கோல்டன் ஸ்ரார் லயன்ஸ் கழகமும் வடலியடைப்பு அரசடி சனசமூக நிலையமும் இணைந்து இலவச மருத்துவ முகாம், மூக்கு கண்ணாடி வழங்கும் நிகழ்வின் பதிவுகள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
13.10.2025 திங்கட்கிழமை
விசுவாவசு வருடம், புரட்டாதி 27

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

தொலைபேசி : 021 205 2300

# மாகாண சபைத் தேர்தலுக்கான அழுத்தம்

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் அனைவரும் பேசுகின்றனர். தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை சேர்ந்தவர்கள் அவ்வப்போது பேசி வருகின்றனர். சில தினங்களுக்கு முன்னர் கூட வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதாக கூறியிருந்தார். ஆனாலும் இராஜதந்திர மட்டங்களில் மாகாண சபைத் தேர்தல் இடம் பெறுமா என்பதில் சந்தேகங்கள் நிலவுகின்றது. முக்கியமாக இந்தியத் தூதரக மட்டத்திலேயே நம்பிக்கை இல்லை.

விஜித ஹேரத், மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் பேசுகின்ற போதே, எல்லை நிர்ணயம் தொடர்பிலும் பேசுகின்றார். இதற்கிடையில் எல்லை நிர்ணயம் தொடர்பான பிரச்னைக்கும் தீர்வு காண வேண்டியுள்ளது. ஆனால், எல்லை நிர்ணயம் சிக்கலானது. அது முடிந்த பின்னர்தான் தேர்தல் என்றால் அது சந்தேகத்துக்குரியது. இந்தப் பின்புலத்தில் அடுத்த ஆண்டு தேர்தல் இடம்பெறுவதற்கான வாய்ப்பு மங்கலான ஒன்றாகவே இருக்கின்றது.

ஜே.வி.பியை பொறுத்தவரையில் உள்ளூராட்சித் தேர்தலில் அவர்கள் எதிர்பார்த்தது நடைபெறவில்லை. இந்த நிலையில் ரணில் - சஜித் கூட்டில் இணக்கப்பாடு காணப்படுவதாகவும் தெரிகின்றது. இவ்வாறானதொரு பின்னணியில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவது பற்றி ஒன்றுக்கு இரண்டு முறை, அரசாங்கம் யோசிக்கும் என்பதே யதார்த்தமானது.

ரணில் - சஜித் கூட்டு ஒரு வேளை வெற்றிகொள்ளப்பட்டால், தேர்தல் நடைபெறுவதற்கான வாய்ப்பு இன்னும் சிக்கலானதாகும். முடிந்தால் தேர்தலை நடத்துங்கள் பார்ப்போம் என்றவாறு அவர்கள் சவால் விடுப்பார்கள் - அதனை அரசங்கமோ தேர்தலை பிற்போடுவதற்கான உள்ளக நியாயமாகக் கொள்ளும். ஏனெனில் நல்லாட்சி அரசாங்கம் என்னும் தோரணையில் இயங்கி ரணில் - மைத்தி அரசாங்கமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இணைந்து மாகாண சபைத் தேர்தலை பிற்போட்ட வரலாறுண்டு. அவர்கள் செய்யமுடியுமென்றால் ஏன் அதனை தேசிய மக்கள் செய்ய முடியாது என்றே அரசாங்கம் யோசிக்கும். இதற்குமப்பால் தேர்தல் இடம்பெற்றால் தேசிய மக்கள் சக்தி உண்மையிலேயே வித்தியாசமான அரசாங்கம் என்பதை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

இந்த நிலையில் இந்த விடயத்தை ஒரு ஜனநாயக விரோத விவகாரமாக முன்னிறுத்தி தமிழ் கட்சிகள் செயலாற்ற வேண்டும். ஆனால், அவ்வாறான எந்தவோர் அசைவையும் காணவில்லை. இப்போது மாகாண சபை தேர்தலுக்கு தீர்வா இல்லையா என்பதல்ல விடயம் - அது இப்போது தமிழர் உரையாடலுக்கும் தேவையற்ற விடயம் ஏனெனில் அதனை விட்டால் வேறு தெரிவுகள் இல்லை.

மாகாண சபை ஒன்றுதான் ஓர் அரசியல் அதிகார அலகுக்கான அந்தஸ்தை தமிழர்களுக்கு வழங்குகின்றது. இது கூறியது கூறலாக இருந்தாலும் இதுதான் உண்மை. எனவே இதனைக் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டிய பொறுப்பு தமிழ் கட்சிகளுக்குண்டு. ஆனால், அதனை உணர்ந்து செயல்படும் நிலையில் கட்சிகள் இருக்கின்றனவா என்றால் இல்லை.

அரசாங்கத்தை பொறுத்தவரையில் அவர்கள் ஒரு வேளை தேர்தலை பிற்போட்டாலும்கூட, தேர்தலை நடத்துங்கள் என்னும் அழுத்தத்தை அவர்கள் மீது பிரயோகிக்கும் ஆற்றல் தமிழர் தரப்புகளுக்கு இல்லை. தமிழர் தரப்புக்களோ இரந்து நிற்கும் நிலையிலேயே இருக்கின்றது. வெளியிலிருந்து எந்தவோர் அழுத்தங்களும் வரப்போவதில்லை. ஒப்பீட்டடிப்படையில் இந்தியாதான் இது பற்றி பேச வேண்டும். ஆனால், அவர்கள் பேசப் போவதில்லை. இந்தப் பின்புலத்தில் நோக்கினால் அரசாங்கம் மிகவும் சுமுகமான அரசியல் சூழலையே எதிர்கொண்டிருக்கின்றது.

# உண்மையை மறைக்க பொலிஸ் தீவிர முயற்சி

## விமல் வீரவன்ஸ குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 13

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான விமல் வீரவன்ஸ, தங்காலை பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவில் அளித்த வாக்குமூலத்தை பொலிஸார் திரித்து ஊடகங்களுக்கு வெளியிட்டதாக குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் தனது பேஸ்புக் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், பொலிஸ் தனது மூன்று மணி நேர வாக்குமூலத்தின் சில பகுதிகளை மட்டும் தெரிவு செய்து, திருத்தி வெளியிட்டு, உண்மையை மறைக்க முயல்வதாக குறிப்பிட்டுள்ளார்.

ஊடகங்களுக்கு அளித்த அறிக்கையின் ஒரு சில பகுதிகளை மட்டுமே பொலிஸார் வெளியிட்டதாகவும் விமல் வீரவன்ஷ தனது பேஸ்புக் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அந்த பதிவு வருமாறு,

"சமீபத்தில் கைது செய்யப்பட்ட பெலியத்தே சனா அல்லது புவக்தண்டாவே சனா என்ற நபர் தொடர்பாக ஒரு ஊடக சந்திப்பில் நான் வெளிப்படுத்திய தகவல்கள் குறித்து வாக்குமூலம் அளிக்க தங்காலை பிரிவு குற்றப் புலனாய்வு அலுவலகத்துக்கு வருமாறு எனக்கு வழங்கப்பட்ட அறிவிப்பின்படி, ஒக்ரோபர் 09 ஆம் திகதி குறித்த அலுவலகத்துக்குச் சென்று அனைத்து தகவல்களுடன் முழு வாக்குமூலத்தையும் வழங்கினேன்.

குறித்த அலுவலகத்துக்கு நான் அளித்த முழு வாக்குமூலத்தின் சில பகுதிகளை மட்டுமே பொலிஸ் ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ளது. நான் அளித்த சுமார் மூன்று மணி நேர வாக்குமூலத்தில் பிரித்தெடுக்கப்பட்ட பகுதிகளை வேண்டுமென்றே திருத்தி இவ்வாறு ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ளது. பொலிஸ் விரும்பியபடி அவற்றைத் திரித்து இவ்வாறு வெளியிடுவதன் மூலம், புவக்தண்டாவே சனா மற்றும் அவரது அரசியல் தொடர்புகள் பற்றிய உண்மையை சமூகத்திலிருந்து மறைக்க பொலிஸ் முயற்சிப்பதாக சந்தேகம் உள்ளது. சமூகத்தில் விவாதத்துக்கு உட்பட்ட ஒரு விடயம், பொலிஸாருக்கு வழங்கப்பட்ட வாக்குமூலங்களை விசாரித்து உண்மையைக் கண்டறிவதற்குப் பதிலாக, பொலிஸார் தங்கள் விருப்பப்படி அவற்றைத் திருத்துவதன் மூலம் தங்கள் சொந்த சுதந்திரத்தை கேள்விக்குள்ளாக்கு கிறார்கள். அவற்றை விளம்பரப்படுத்துதல். பொலிஸாரால் ஊடகங்களுக்கு வெளியிடப்பட்ட அறிக்கை முற்றிலும் திரிபுபடுத்தப்பட்ட அறிக்கையாகும், மேலும் இது சட்டத்தை மதிக்கும் பொலிஸுக்கு ஏற்ற செயல் அல்ல, மாறாக அரசாங்கத்தின் சேறு பூசும் படைக்கு ஏற்ற செயல் என்று கூற வேண்டும் - இவ்வாறு பதிவிட்டுள்ளார். (எ)

# சட்டத்தை தெரிவுப் பாடமாக அறிமுகப்படுத்த வேண்டும்

## அஜித் பி பெரேரா வலியுறுத்தல்

கொழும்பு, ஒக். 13

புதிய கல்வி மறுசீரமைப்பில் சாதாரண தரம் மற்றும் உயர்தர பரீட்சைகளில் அடிப்படை சட்டத்தை தெரிவு பாடமாக அறிமுகப்படுத்த வேண்டும். புதிய கல்வி மறுசீரமைப்பை நாங்கள் ஏற்கிறோம். புதிய தொழில்துறை மற்றும் உலகுக்கு பொருந்தும் வகையில் கல்வித் திட்டம் மறுசீரமைக்கப்பட வேண்டும். சட்டத்தை கற்பதும் சட்டமாக்கப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற பாடசாலை கலைத்திட்டத்தில் சட்டம் மற்றும் ஒழுக்கவியல் விடயங்களை உள்ளடக்குதல் தொடர்பான தனிநபர் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,


பாடத்திட்டத்தில் சட்டத்தை கட்டாய பாடமாக்குவது குறித்து கடந்த 20 ஆண்டு காலமாக பாராளுமன்றத்தில் விவாதிக்கப் படுகிறது. குடியுரிமை கல்வி பாடத்தை பெயர் மாற்றம் செய்து அதனை அடிப்படை சட்டம் மற்றும் குடியுரிமை கல்வி என்று அறிமுகப்படுத்தும் யோசனையை ஆளும் தரப்பின் உறுப்பினர் முன்வைத்துள்ளமை வரவேற்கத்தக்கது.

2026 ஆம் ஆண்டு முதல் குடியுரிமை கல்வியில் அடிப்படை சட்டத்தை பிரதான பகுதியாக உள்ளடக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளமை வரவேற்கத்தக்கது. நாம் ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம், சமயம் ஆகிய பாடங்களை தேவைக்காக கற்றுக்கொள்கிறோம். ஆனால், வாழ்க்கையில் சகல பகுதிகளுடனும் தொடர்புடைய சட்டத்தை கற்பதில்லை. சட்டத்தை கற்பதும் சட்டமாக்கப்பட வேண்டும். சட்டம் தெரியாது என்று குறிப்பிடுவது விடுவிப்புக்கான ஒரு காரணியாக கருதப்படமாட்டாது.

சிவில் சட்டம், நிர்வாகச் சட்டம் மற்றும் குடியியல் சட்டம் தொடர்பில் அடிப்படை புரிதலை பெற்றுக்கொள்வது அத்தியாவசியமானது. தற்போதைய பாடத்திட்டத்தில் இதற்குரிய போதுமான வழிமுறைகள் கிடையாது. புதிய கல்வி மறுசீரமைப்பில் அடிப்படை சட்டத்துக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

புதிய கல்வி மறுசீரமைப்பில் சாதாரண தரம் மற்றும் உயர்தர பரீட்சைகளில் அடிப்படை சட்டத்தை தெரிவு பாடமாக அறிமுகப்படுத்த வேண்டும். புதிய கல்வி மறுசீரமைப்பை நாங்கள் ஏற்கிறோம். புதிய தொழில்துறை மற்றும் உலகுக்கு பொருந்தும் வகையில் கல்வித் திட்டம் மறுசீரமைக்கப்பட வேண்டும் - என்றார்.(எ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு




### மேடம்
குடும்பத்தில் இருந்து வந்த கூச்சல் குழப்பம் விலகும். வர வேண்டிய பணம் கைக்கு வரும். வாகனத்தில் கவனம் தேவை. உறவினர்கள் மதிப்பார்கள். திடீர் திருப்பங்கள் நிறைந்த நாள்.

### இடபம்
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் வேலைச்சுமையால் பதற்றம் அதிகரிக்கும். அனாவசியமாக மற்றவர்கள் விஷயத்தில் தலையிட வேண்டாம். பொறுமை தேவைப்படும் நாள்.

### மிதுனம்
திட்டமிட்ட காரியங்களை அலைந்து திரிந்து முடிக்க வேண்டி வரும். வாகனத்தை இயக்கும் போது அலைப்பேசியில் பேச வேண்டாம். அரசாங்க விஷயம் தாமதமாகும்.

### கடகம்
ஆன்மிகப் பெரியோரின் ஆசி கிட்டும். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். பிரபலங்களால் ஆதாயம் உண்டு. சிறப்பு மிகுந்த நாள்.

### சிம்மம்
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். பழைய உறவினர்கள் நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள். சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள்.

### கன்னி
கணவன்-மனைவிக்குள் இருந்த மனகசப்புகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். வாழ்வில் ஒரு தெளிவு பிறக்கும். குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். தடையின்றி முடியும்.

### துலாம்
சந்திராஷ்டமம் இருப்பதால் அவசர முடிவுகள் எடுக்காமல் இருப்பது நல்லது. யாருக்கும் ஜாமீன் கையெழுத்திட வேண்டாம். சிலருக்கு நல்லது சொல்லப் போய் பொல்லாப்பாக முடியும்.

### விருட்சிகம்
உங்களின் திறமையை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். சகோதர வகையில் நன்மை உண்டு. மனைவி வழியில் ஆதரவு பெருகும். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

### தனுசு
எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். உறவினர் நண்பர்களால் ஆதாயமுண்டு. அரசாங்க விஷயம் சாதகமாக முடியும். விருந்தினர்கள் வருகையால் வீடு களைக்கட்டும்.


### மகரம்
புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். பிள்ளைகளின் தனித்திறமைகளை கண்டறிவீர்கள். ஆடம்பர செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். புதுமை படைக்கும் நாள்.

### கும்பம்
சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயல்படுவீர்கள். உறவினர் நண்பர்களுடன் மனம் விட்டு பேசுவீர்கள். காணாமல் போன முக்கிய ஆவணங்கள் கிடைக்கும்.

### மீனம்
எதிர்ப்புகள் அடங்கும். நட்பு வட்டம் விரியும். அரசு அதிகாரிகளின் உதவியால் சில காரியங்களை முடிப்பீர்கள். தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். வேற்று மதத்தவர் அறிமுகமாவார்.

# இந்து இளைஞர் சங்கத்தின் வைரவிழா நிகழ்வு





யாழ்ப்பாணம், ஒக். 13

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தின் 60 ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு வைரவிழா நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை மல்லாகம் பழம்பதி தேவஸ்தானத்திலிருந்து கலை கலாசார பண்பாட்டு அம்சங்களுடன் கூடிய நடைபவனியுடன் ஆரம்பமாகி பிரதான நிகழ்வு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் நடைபெற்றது.

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத் தலைவர் பொ. விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு ஆசியுரையை மாவை ஆதீன முதல்வர் மகாராஜாசிறீ து. ஷ. இரத்தினசபாபதிக் குருக்கள், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான பிரதம குரு பிரம்மசிறீ சுந்தர செந்தில்ராஜ சிவாச்சாரியார் மற்றும் மருதனார்மடம் சிறீ அருள்வளர் சுந்தர ஆஞ்சநேயர் ஆலய ஆதீனகர்த்தா சிவசிறீ இ. சுந்தரரேஸ்வரக் குருக்கள் ஆகியோர் வழங்கினர்.

இந்த விழாவுக்கு பிரதம விருந்தினராக தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர், செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகனும், சிறப்பு விருந்தினர்களாக தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தர்மகர்த்தா சபைத் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான த. சித்தார்த்தனும், கௌரவ விருந்தினர்களாக நல்லூர் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள், வலி. வடக்கு பிரதேச சபை தவிசாளர் சோ. சுகிர்தன், தெல்லிப்பழை பிரதேச செயளாளர் சிவகெங்கா சுதீஸ்ணர் மற்றும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான குரு சிவப்பிரம்மசிறீ இ. பிரசன்னவதனக் குருக்கள் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

60ஆவது ஆண்டு நிறைவாக "வைரச்சங்கமம்" எனும் நூல் வெளியீடு செய்யப்பட்டதுடன் வீணைக்கச்சேரி, கோவலன் கண்ணகி நாடகம் மற்றும் தெய்வீக இசைச்சங்கமம் ஆகிய நிகழ்வுகளும் நடைபெற்றன.(எ-03)

# தேசவழமை சட்டத்தில் ஆதனங்கள் சட்டத்தரணிகள் சங்கத்தால் செயலமர்வு

யாழ்ப்பாணம், ஒக்.13

"தேசவழமைச் சட்டத்தில் ஆதனங்கள்" எனும் விடயப் பரப்பிலான கருத்தமர்வு யாழ்ப்பாணம் மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்போது சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், தேசவழமைச் சட்டம் தொடர்பில் எல்லோரும் அறிந்திருந்தாலும் இது தொடர்பான முழுமையான அறிவை பெற்றிருத்தல் அவசியமானதொன்றாக காணப்படுவதாகவும் உத்தியோகத்தர்கள் என்ற ரீதியில் மட்டுமில்லாமல் வடக்கு மாகாணத்தின் சாதாரண பொது மக்கள் என்ற ரீதியில் எமது சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு இந்த சட்டம் தொடர்பில் அறிந்திருக்க வேண்டிய கடப்பாடு உடையவர்களாக நாம் காணப்படுவதாகவும் கூறினார். இந்தச் சந்தர்ப்பம் எமக்கு கிடைத்தமை ஓர் அரிய வாய்ப்பு என்று குறிப்பிட்டத்துடன் இதனை ஏற்பாடு செய்த சட்டத்தரணிகள் சங்கத்துக்கு நன்றிகளையும் தெரிவித்தார். மேலும், எமது நாட்டில் நடைமுறைப்படுத்தப்படும் பொதுச் சட்டங்களுக்கு மேலதிகமாக தேசவழமைச் சட்டம், கண்டியச் சட்டம், இஸ்லாமியச் சட்டம் என்ற 3 சட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படுகின்றன. இவற்றுள் வட மாகாண தமிழ் மக்களுக்கென தேசவழமைச் சட்டம் நடைமுறைப்படுத் தப்படுகின்றது. இந்தச் சட்டம் உரிமை மற்றும் பெண்களின் சொத்து தொடர்பான விடயங்கள் பற்றி குறிப்பிடுவதாகவும், இவ்வாறான சட்டம் தொடர்பான பல்பரிமான சட்ட ஏற்பாடுகளை எமது அலுவலகங்களில் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்ற நோக்கில் இந்தச் செயலமர்வு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார். (எ)

# வீதி புனரமைப்பு ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 13

யாழ். மாநகர சபையின் 02ஆம் வட்டாரம் கலட்டி அம்மன் வீதி வேலைகளை முதல்வர் வி. மதிவதனி நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்தார்.

யாழ். மாநகர சபை உறுப்பினர் ப. தர்சானந்தின் அழைப்பின் பேரில் கலந்துகொண்ட முதல்வர் வீதி புனரமைப்பு வேலைகளை ஆரம்பித்து வைத்தார்.

நிகழ்வில் வடமாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் நந்தகோபாலன், யாழ். மாநகர சபை பிரதி முதல்வர் இ. தயாளன், 02ஆம் வட்டார உறுப்பினர் ப. தர்சா னந்த் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(எ-05)

# தேசிய உளவளத்துணை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், ஒக். 13

"பேரழிவுகள் மற்றும் அவசர நிலைகளில் மனநல சேவைக்கான அணுகல்" எனும் தொனிப் பொருளில் உலக உளநல நாள் மற்றும் தேசிய உளவளத்துணை நிகழ்ச்சி யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் கடந்த 10 ஆம் திகதி யாழ்ப்பாணம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தலைமையுரையாற்றிய மாவட்ட அரசாங்க அதிபர் கூறுகையில், "யுத்தத்தின் பின்னர் எமது மாவட்ட மக்களின் உளநல நிலைமைகளில் மேம்பாட்டு நிலை ஏற்பட தன்னலம் கருதாது தன்னாலான காத்திரமான பங்களிப்பை சிறப்பாக வழங்கு கின்ற யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை மனநல மருத் துவ நிபுணர் எஸ். சிவதாஸூக்கு மாவட்ட செயலகம் சார்பாக நன்றிகள். மேலும் உளநலத்துக் கான ஆலோசனையை வழங்கக் கூடிய இந்த நிகழ்விற்கு பிரதேச செயலாளர்கள் உட்பட அனை வரும் அழைக்கப்பட்டுள்ளமை சிறப்பானது. அரச திணைக்க ளங்கள்உட்பட அணைத்து இடங் களிலும் உளநலம் பாதிக்கப் பட்டுள்ள பலர் கடமையாற்றுவதால் அவர்களை சரியான முறையில் ஆற்றுப்படுத்தும் தலையாய பொறுப்பு உள்ளது."- என்றார்.

# சைகைமொழியின் முக்கியத்துவம்: விழிப்புணர்வு பட்டறை

யாழ்ப்பாணம், ஒக். 13

செவிப்புல வலுவற்றோர்கள் தொடர்பாடலில் சமூகத்தில் எதிர்கொள்ளும் பிரச்னைகள் மற்றும் தமிழ் சைகை மொழியின் முக்கியத்துவம் தொடர்பில் அரச அதிகாரிகளுக்கான வழிப்புணர்வு பட்டறை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் கடந்த 10 ஆம் திகதி யாழ். மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது கருத்து தெரிவித்த மாவட்ட அரசாங்க அதிபர், செவிப்புல வலுவற்றோர்கள் தொடர்பாடலின் போது சமூகத்தில் எதிர்கொள்ளும் பிரச்னைகளை இனங்கண்டு அவற்றுக்கு தீர்வு காணும் நோக்கில் இந்தக் கலந்துரையாடல் எற்பாடு செய்யப்பட்டுள்ளது. சமூகத்தில் எந்தவித பாதிப்புக்கும் உள்ளாகாமல் அவர்கள் செயல்பட வேண்டும். எந்தவித வேறுபாடும் அற்ற வகையில் உங்களோடு கடமையாற்றவுள்ளதாகவும் தெரிவித்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளைக்கொடி விவகாரம்: விரைவில் காணொலி வரும்!

## சரத் பொன்சேகா தெரிவிப்பு



கொழும்பு, ஒக். 13

2009 ஜனவரி 10 ஆம் திகதி கோட்டாபய, சவேந்திர சில்வாவுக்கு அழைப்பு ஏற்படுத்திப் பேசியிருந்தார். அதன் பின்னர், வெள்ளைக் கொடிகளுடன் மக்கள் வருகின்றனர். எவ்வாறாயினும், அவர்களைக் கொல்லுவோம் என சவேந்திர சில்வா கூறினார் - இவ்வாறு முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அத்துடன், வெள்ளைக் கொடியுடன் வந்த பொது மக்களைச் சுட்டுக் கொல்லுமாறு உத்தரவிட்டதற்கான காணொலியை விரைவில் தாம் வெளியிடுவார் என்றும் அவர் கூறினார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

2009 பெப்ரவரி முதலாம் திகதி தற்காலிகமாக யுத்த நிறுத்தத்தை அமுல்படுத்துமாறு ஜனவரி 28 ஆம் திகதி மகிந்த ராஜபக்ஷ எனக்கு உத்தரவிட்டார்.

அந்த சந்தர்ப்பத்திலேயே, விடுதலைப் புலிகள் ஜனவரி 31ஆம் திகதி இரவு நந்திக்கடல் வழியாக வந்து பெரும் தாக்குதலை நடத்தினர். இதனால், மார்ச் மாதம் நடுப்பகுதியில் நிறைவடைய வேண்டிய யுத்தம் மே மாதம் வரை கொண்டு செல்லப்பட்டது.

அந்தச் சம்பவத்துக்கும் யுத்தம் நீடிக்கப்பட்டு, அதற்காக இழக்கப்பட்ட உயிர்களுக்கும், சொத்துகளுக்கும் மகிந்த ராஜபக்ஷ பொறுப்புக் கூற வேண்டும். வேறொரு நாடாக இருந்தால், மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து மரண தண்டனை வழங்கப்பட்டிருக்கும்.

இதேவேளை, வெள்ளைக் கொடி விவகாரம் குறித்து தான் விரைவில் காணொலி ஒன்றையும் வெளியிடவுள்ளதாக சரத் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

2009 ஜனவரி 10 ஆம் திகதி கோட்டாபய, சவேந்திர சில்வாவுக்கு அழைப்பு ஏற்படுத்திப் பேசியிருந்தார்.

அதன் பின்னர் தமக்கு முன்பாக கமெராக்கள் இருப்பதை மறந்த, சவேந்திர சில்வா தனக்கு அருகிலுள்ள உத்தியோகத்தரிடம் வெள்ளைக் கொடி விவகாரம் குறித்துக் கூறினார்.

வெள்ளைக் கொடிகளுடன் மக்கள் வருவதாகவும் எவ்வாறாயினும், அவர்களைக் கொல்லுவோம் என சவேந்திர சில்வா கூறினார் என்றும் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். (ஐ)

# சீனாவை சென்றடைந்தார் பிரதமர் ஹரிணி அமரசூரிய



கொழும்பு, ஒக். 13

சீன அரசாங்கத்தின் சிறப்பு அழைப்பின்பேரில் 2025ஆம் ஆண்டுக்கான பெண்கள் உலகளாவிய தலைவர்கள் கூட்டத்தில் கலந்து கொள்ள பிரதமர் ஹரிணி அமரசூரிய சீனாவை சென்றடைந்துள்ளார்.

பீஜிங்கில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டம், "பகிரப்பட்ட ஓர் எதிர்காலம் - பெண்களின் முழுமையான வளர்ச்சிக்கான புதிய மற்றும் துரிதப்படுத்தப்பட்ட செயல்முறை", என்ற கருப்பொருளின் கீழ் நடைபெறவுள்ளது.

பிரதமர் அமரசூரிய தனது பாலின சமத்துவம், பெண்களுக்கு அதிகாரமளித்தல் உள்ளடக்கிய கொள்கை சீர்திருத்தங்களில் இலங்கையின் முன்னேற்றத்தை எடுத்துரைக்கும் முக்கிய உரை ஒன்றை நிகழ்த்தவுள்ளார்.

சமூக அபிவிருத்தி, கல்வி மற்றும் இரு நாடுகளுக்கும் இடையிலான பெண்கள் தலைமையிலான தொழில்முனைவோர் ஆகியவற்றில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தும் வகையில் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங், பிரதமர் லி கியாங் ஆகியோருடன் அவர் இரு தரப்பு கலந்துரையாடல்களை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

# ஹோட்டலில் தீ விபத்து!

கொழும்பு, ஒக். 13

ஹோட்டல் ஒன்றில் தீ விபத்தில் சேதமடைந்தது.

கொழும்பு - கிருலப்பனையிலுள்ள ஹோட்டல் ஒன்றிலேயே நேற்று காலை இந்தத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

கொழும்பு மாநகர சபையின் 2 தீயணைப்பு வாகனங்களின் உதவியுடன் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்திய உணவுகளை விற்பனை செய்யும் ஹோட்டல் ஒன்றிலேயே இந்தத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. (ஐ)

# 220,538 வாகனங்கள் புதிதாக பதிவாகின

கொழும்பு, ஒக். 13

வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்ட ஜனவரி 28ஆம் திகதி முதல் செப்ரெம்பர் 30 வரை 2 இலட்சத்து 20 ஆயிரத்து 538 வாகனங்கள் புதிதாக பதிவு செய்யப்பட்டுள்ளன என்று மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவற்றில் அதிகமானவை மோட்டார் சைக்கிள்கள். ஒரு இலட்சத்து 60 ஆயிரத்து 590 மோட்டார் சைக்கிள்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

தவிர, 37 ஆயிரத்து 115 கார்கள், 8 ஆயிரத்து 820 முச்சக்கர வண்டிகள், 2 ஆயிரத்து 806 டிராக்டர்கள், 2 ஆயிரத்து 156 இரட்டை பயன்பாட்டு வாகனங்கள் என 18 பிரிவுகளின் கீழ் இந்த வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

செப்ரெம்பர் மாதத்தில் மட்டும் 48 ஆயிரத்து 957 வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. (ஐ)

# கடை ஒன்றின்மீது துப்பாக்கிச்சூடு!

கொழும்பு, ஒக். 13

கடை ஒன்றின்மீது நேற்று முன்தினம் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

களுத்துறை, பாலத்தோட்டா பகுதியில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் துப்பாக்கிச்சூட்டை நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

மோட்டார் சைக்கிள் பழுதுபார்க்கும் கடையை குறிவைத்து துப்பாக்கிச் சூடு தாக்குதல் நடத்தப்பட்டது. எனினும், இதில், யாருக்கும் காயம் ஏற்படவில்லை.

களுத்துறை பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவு மற்றும் களுத்துறை தெற்கு காவல்துறை இணைந்து சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# முட்டையின் விலையை ரூ. 10ஆல் குறைக்க முடிவு

கொழும்பு, ஒக். 13

அகில இலங்கை சிறு மற்றும் நடுத்தர முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம், நாட்டில் முட்டை விலையை குறைப்பதற்கான முக்கிய தீர்மானம் ஒன்றை எடுத்துள்ளது.

அந்த சங்கத்தின் தலைவர் நவோத் சம்பத் பண்டார கூறுகையில்,

முட்டை ஒன்றின் விலையை 10 ரூபாயால் குறைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்படி, வெள்ளை முட்டை ஒன்றின் விலை ரூ.18 ஆகவும், சிவப்பு முட்டை ஒன்றின் விலை ரூ.20 ஆகவும் விற்பனை செய்யப்படும்.

அரசு வரி கொள்கைகள் மற்றும் தீவன விலை சீரமைப் பில் மாற்றங்கள் ஏற்பட்டால், எதிர்காலத்தில் விலையை மேலும் குறைக்கும் வாய்ப்பும் உள்ளதாக சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த தீர்மானம் உடனடியாக அமலுக்கு வரும் எனவும், நாட்டின் அனைத்து பகுதிகளிலும் இதற்கமைய விற்பனை நடைபெறும் எனவும் அகில இலங்கை சிறு மற்றும் நடுத்தர முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது. (ஐ)

# மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஒக். 13

கட்டுமான பணியில் ஈடுபட்டிருந்த ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார்.

கொழும்பு - வத்தளை - மாபோல பகுதியில் நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கட்டுமான பணி நடந்த மூன்று மாடி கட்டடத்துக்கு அருகிலுள்ள மின் கம்பி அமைப்பிலிருந்தே மின்சாரம் தாக்கி அவர் உயிரிழந்தார்.

இதில், வத்தளையைச் சேர்ந்த 55 வயதுடைய நபரே உயிரிழந்தார். (ஐ)

# "மருந்துகளுக்கு தட்டுப்பாடு"

கொழும்பு, ஒக். 13

நாடளாவிய ரீதியில் சுமார் 100க்கும் மேற்பட்ட மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று மருத்துவ மற்றும் சிவில் உரிமைகள் மருத்துவர்களின் தொழிற்சங்கக் கூட்டணி தெரிவித்துள்ளது.

மருத்துவமனைகள் இன்னும் முக்கிய மருந்துகள் மற்றும் சத்திர சிகிச்சை பொருட்கள் பற்றாக்குறையை எதிர்கொள்கின்றன என்று அந்தக் கூட்டணியின் தலைவர் மருத்துவர் சமல் சஞ்சீவ குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# "மாகாண சபை தேர்தலில் போட்டியிட எம்.பி.க்கள் பலர் பதவி விலக தயார்!"

கொழும்பு, ஒக். 13

ஐக்கிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்ற உறுப்பினர்களான பலர் தங்கள் பதவியை இராஜினாமா செய்து, எதிர்வரும் மாகாண சபைகள் தேர்தலில் போட்டியிடத் தயாராக இருப்பதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு பேசிய அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இந்த தியாகங்களைச் செய்து மாகாண சபைகள் தேர்தலில் கட்சியை வெற்றி பெறச் செய்ய அவர்கள் தயாராக இருக்கின்றனர். ஆளும் தரப்பு உறுப்பினர்கள் இதற்கு முன்பு இதுபோன்ற செயல்களைச் செய்திருந்தாலும், எதிர்க் கட்சியிலிருந்து இதுபோன்ற ஒன்று நடப்பது அரிதான விடயம்.

2020 பெப்ரவரி பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, தொலைபேசி சின்னத்தின் கீழ் இதுவரை இரண்டு பொதுத் தேர்தல்களிலும், ஒரு ஜனாதிபதி தேர்தலிலும் உள்ளூராட்சித் மன்றத் தேர்தலிலும் போட்டியிட் டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி கட்சிக்கு 1,773 உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் காணப்படுகின்றனர். இவர்களில் 714 பேர் பெண்கள் ஆவர். கட்சியின் ஆரம்பம் தொட்டு, அன்றிலிருந்து இவர்கள் செய்த நன்கொடைகள் மற்றும் தியாகங்களுக்கு நான் நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

இலங்கையில் இரண்டாவதுகூடிய எண்ணிக்கையிலான உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களை ஐக்கிய மக்கள் சக்தியே கொண்டுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். (ஐ)

# துப்பாக்கிகளுடன் சந்தேகநபர் கைது

கொழும்பு, ஒக். 13

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கிகள் மற்றும் வெடிமருந்துகளுடன் சந்தேக நபர் ஒருவரை தங்காலை பிரிவு குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

திஸ்ஸமஹாராமை பொலிஸ் பிரிவில் சாமகுலிய குளத்துக்கு அருகே நடத்தப்பட்ட சோதனையின்போதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரிடமிருந்து, 02 உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கிகள், 11 ரி - 56 தோட்டாக்கள், 03 எம் -16 தோட்டாக்கள் மற்றும் 03 எம். பி. எம். ஜி. தோட்டாக்கள் என்பனவும் கைப்பற்றப்பட்டன.

இவ்வாறு கைதான சந்தேகநபர் 37 வயதான முன்னாள் சிப்பாய் ஆவார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசல் காணி உரித்துடன் மலையக மக்களுக்கு வீடு

## மலையக அதிகார சபை தடையில்லாது பயணிக்கும் -பிரதியமைச்சர் பிரதீப் உறுதி

நுவரெலியா, ஒக். 13

கடந்த காலத்தில் மலையக மக்களுக்கு வழங்கிய காணிகள் அந்த மக்களுக்குச் சொந்தமான காணிகள் கிடையாது. இன்றும் அந்த மக்கள் அதில் வீடுகளைக் கட்டியிருந்தாலும் கூட அந்தக் காணி அவர்களுக்கு சொந்தமானதாக இருக்கவில்லை. தற்போது மலையக மக்களுக்கு கட்டப்படுகின்ற வீடுகளுக்கு அசல் காணி உரித்து மூலமாக 10 பேர்ச்சஸ் காணி வழங்கப்படுகின்றது. எனவே, இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழ் கட்டப்படுகின்ற வீடுகள் அசல் காணி உரிமத்தின் கீழ் கட்டப்படுகின்றன. இது நிச்சயமாக அந்த மக்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி. இந்த வீட்டை அவர்களிடம் கொடுத்த பிற்பாடு வீடும் காணியும் அவர்களுக்குச் சொந்தமாகும் என பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப்தெரிவித்தார். ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மலையக அதிகார சபை தடையில்லாது பயணிக்கும் என்றும் அவர் கூறினார்.(எ)

# முத்துநகர் விவசாயிகள் பொலிஸாரால் கைது!

திருகோணமலை, ஒக். 13

திருகோணமலை - முத்துநகர் விவசாயிகளை சீனக் குடா பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்தனர்.

குறித்த விவசாயிகள் முத்துநகர் வயல் நில பகுதியில் சூரிய மின் சக்தி திட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட காணியை விடுத்து அண்மித்த காணியில் உழவியந்திரத்தை கொண்டு விவசாய நடவடிக்கைக்காக தரையை பதப்படுத்தும் போது அத்து மீறி தனியார் காணிக்குள் நுழைந்த குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்டதாக தெரியவருகிறது.

இதில் ஐந்துக்கும் மேற்பட்ட விவசாயிகளை உழவியந்திரம், மோட்டார் சைக்கிள் உள்ளிட்டவற்றையும் கையகப்படுத்தியதாக தெரியவருகிறது.

விவசாய காணிகள் அபகரிக்கப்பட்டதையடுத்து தொடர் சத்தியாக்கிரக போராட்டத்தை முத்தநகர் விவசாயிகள் மேற்கொண்டு வருகின்றனர். இந்த நிலையில், தனியார் காணி எனவும் உரக் கம்பனி ஒன்றுக்கு சொந்தமான காணி எனவும் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்ட தையடுத்து விவசாயிகள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. முத்துநகர் விவசாய காணி அபகரிப்பு, பாராளுமன் றிலும் ஊடகங்களிலும் பெரும் பேசு பொருளாகியுள்ளது. இந்த நிலையில் எஞ்சிய காணி யில் விவசாயம் செய்யலாமென பிரதியமைச்சர் கூறியதால் நெற் செய்கைக்கான தயார்படுத் தலை மேற்கொண்டதாக கைதான விவசாயிகள் தெரிவித்தனர்.(எ-12)

# விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தின் 115ஆவது ஆண்டு நிறைவு நடைபவனி



மட்டக்களப்பு, ஒக். 13

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்துக்குட்பட்ட அரசடித்தீவு விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தின் 115ஆவது ஆண்டு நிறைவு விழா நடைப வனி நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

இதன்போது அரசடித்தீவு விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தின் வீதி நுழைவாயில் பெயர் பலகை திரை நீக்கம் செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அரசடித்தீலிருந்து ஆரம்ப மாகிய நடைபவனி, கொக்கட்டிச்சோலை பிரதான வீதி ஊடாக மகிழடித்தீவு, பண்டா ரியாவெளி, கடுக்காமுனை ஊடாக மீண்டும் பாடசாலையை வந்தடைந்தது.

(எ)

# இடியுடன் கூடிய மழைக்கு வாய்ப்பு

கொழும்பு, ஒக். 13

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் பிற்பகல் 01. 00 மணிக்குப் பின்னர் இடியுடன் கூடிய மழை பெய்யும் சாத்தியம் நிலவுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று அதிகாலை விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேல், மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் பிற்பகல் வேளையில் 50 மில்லி மீற்றருக்கும் அதிக அளவில் பலத்த மழை பெய்யக்கூடும்.

மேற்கு மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி, மாத்தறை மற்றும் புத்தளம் மாவட்டங்களிலும் காலை வேளையில் மழை பெய்யும்.

அத்துடன் மத்திய மாகாணங்களில் சில இடங்களில் காலை வேளையில் மூடுபனியுடன் கூடிய வானிலை நிலவும்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் பலத்த காற்றும் வீசக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

(எ)

# மாணவர்களுக்கு கௌரவம்




சம்மாந்துறை, ஒக். 13

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கல்விப் பிரிவின் ஏற்பாட்டில் க. பொ. த. சாதாரண தரத்தில் 9ஏ சித்திகள் மற்றும் க.பொ.த. உயர்தரத்தில் 3ஏ சித்திகளை பெற்ற சம்மாந்துறை வலய மாணவர்களையும் பெற்றோர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த 10 ஆம் திகதி சம்மாந்துறை மஜீட் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான ரிஷாட் பதியுதீன், அஷ்ரப் தாஹிர், சம்மாந்துறை வலயக்கல்வி பணிப்பாளர், பிரதேச சபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(எ-06)

# ஒழுங்குமுறைகளை மீறினால் சட்டநடவடிக்கை எடுக்கப்படும்

நுவரெலியா, ஒக். 13

பூங்காவின் விதிமுறைகள் மற்றும் ஒழுங்குமுறைகளை மீறுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஹோட்டன் சமவெளி தேசிய பூங்காவின் அதிகாரி சிசிர ரத்நாயக்க தெரிவித்தார்.

இலங்கையின் மத்திய மலைநாட்டின் நுவரெலியா மாவட்டத்தில் 2,100 மீற்றருக்கும் அதிக உயரத்தில் ஒளிந்திருக்கும் ஹோட்டன் சமவெளியின் தேசிய பூங்காவில் பூத்துள்ள நீலக்குறிஞ்சி மலர்களை பார்வையிட அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகை தரு கின்றனர்.

12 ஆண்டுகளுக்கு ஒரு முறை பூக்கும் நீலக்குறிஞ்சி மலர்களை பார்வையிட வரும் சுற்றுலாப் பயணிகள் பூங்காவின் ஒழுங்குமுறைகளை முறையாக கடைப்பிடிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்- என்றார்.

வாழைச்சேனை துறைமுகத்திலிருந்து சென்ற

# இயந்திர படகு கடலில் மூழ்கியது 3 மீனவர்கள் பாதுகாப்பாக மீட்பு

மட்டக்களப்பு, ஒக். 13

வாழைச்சேனை துறைமுகத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற இயந்திரப் படகொன்று கடந்த வெள்ளிக்கிழமை கடலில் மூழ்கியது.

வாழைச்சேனை துறைமுகத்திலிருந்து கடந்த 4 ஆம் திகதி மூன்று மீனவர்கள் மீன்பிடிப்பதற்காக இயந்திரப் படகில் ஆழ் கடலுக்குச் சென்றனர்.

மூவரும் மீன்களைப் பிடித்துவிட்டு வலைகளை படகில் ஏற்றும் போது பாரிய அலையில் சிக்குண்டு படகு கடலில்மூழ்கியது.

குறித்த கடற்பரப்பில் மற்றுமொரு படகில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மீனவர்கள் கவிழ்ந்த படகிலிருந்த மூன்று மீனவர்களையும் பாதுகாப்பாக மீட்டு நேற்றுக்காலை கரைக்கு கொண்டு வந்தனர்.

இந்த படகு விபத்துச் சம்பவம் வாழைச்சேனை துறைமுகத்திலிருந்து சுமார் 103 கிலோ மீற்றர் தொலைவில் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

வாழைச்சேனையைச் சேர்ந்த படகு உரிமையாளர் இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததுடன், துறைமுக அதிகாரிகளின் கவனத்துக்கும் கொண்டு சென்றுள்ளார்.

(எ)

# காத்தான்குடியில் இளைஞன் கைது!

காத்தான்குடி, ஒக். 13


மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முதலாம் குறிச்சி பிரதேசத்தில் 10 கிராம் 150 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தார்.

பொலிஸார் நடத்திய திடீர் சுற்றிவளைப்பின் போது முதலாம் குறிச்சி அல் அக்ஸா ஒழுங்கையில் வைத்து சந்தேக நபரான 28 வயதுடைய இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து 10.150 கிராம் ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# பேரிடர்களின்போது களப்பணியாற்றிய அமைப்புகளுக்கு வீரமானிடர் விருது



கொழும்பு, ஒக். 13

பேரிடர்களின்போது தமது உயிரைப் பணயம் வைத்து - உயிராபத்தை எதிர்நோக்கிய மக்களைக் காப்பாற்றிய அல்லது அதற்காக முனைந்த வீர மானிடர்களை விருது வழங்கி கௌரவிக்கும் தேசிய விழா நேற்று முன்தினம் சனிக்கிழமை சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் கொழும்பு, பத்தரமுல்லையில் அமைந்துள்ள காணிச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

பொது மக்கள் வீரச் செயலுக்கான மன்றத்தின் ஏற்பாட்டில் 28 ஆவது முறையாக நடைபெற்ற இந்த விருது விழாவில் அம்பாறை மாவட்டத்தில் உத்வேகத்துடன் செயல்படுகின்ற நான்கு மனிதாபிமான அமைப்புகளும் வீரமானிடர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டன.

சாய்ந்தமருது ஜனாஸா நலன்புரி மக்கள் பேரவை, மாளிகைக்காடு ஜனாஸா நலன்புரி அமைப்பு, காரைதீவு ராவணா அமைப்பு மற்றும் கல்முனை ஆழ்கடல் சுழியோடிகள் அமைப்பு என்பன இவ்வாறு விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டன.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்குப்பிட்டி...

இவ்வாறு மீட்கப்பட்டது என்றும் தெரியவருகிறது. எனினும், உயிரிழந்த பெண் அடையாளம் காணப்படவில்லை.

கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் எஸ். சிவபாலசுப்பிரமணியம் சம்பவ இடத்துக்கு சென்று பார்வையிட்டு சடலத்தை மீட்க உத்தரவிட்டார்.

மீட்கப்பட்ட சடலம் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பூநகரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## உலக...

வந்தடைந்தார். அவரை சுகாதாரம் மற்றும் ஊடக அமைச்சின் செயலாளர் மருத்துவர் அனில் ஜாசிங்க வரவேற்றார்.

உலக சுகாதார நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த மாநாடு இன்று திங்கட்கிழமை முதல் நாளை மறுதினம் புதன்கிழமை வரை கொழும்பில் நடைபெறவுள்ளது.

தென்கிழக்கு ஆசிய பிராந்தியத்தின் நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் சுகாதார அமைச்சர்களும் இந்த மாநாட்டுக்காக நாட்டுக்கு வருகை தரவுள்ளனர். (ஐ)

## மலையகத்தில்...

கட்டமாக இந்த 2 ஆயிரம் வீட்டு பத்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

வசதியான வீடு, சுகாதாரமான வாழ்க்கை என்ற கருப்பொருளின் கீழ் நாட்டில் மலையக மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் செயலபடுத்தப்படும் இந்த வீட்டுத் திட்டம், மலையக தொழிலாளர்களுக்கு ஒரு வீட்டை வழங்குவதோடு மட்டுமல்ல், நாட்டுக்கு சேவையை வழங்கும் மரியாதைக்குரிய குடிமகனாக அவர்கள் மாறுவதற்கான அடித்தளமாகவும் இருக்கும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், இந்த வீடுகளை வழங்குவதற்கான சரியான வழிமுறையின், பயனாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## தோட்டத்...

உறுதி செய்யும் பொறுப்பு அரசாங்கத்துக்கு உள்ளது.

அவர்களுக்கு வீட்டு உரிமையை வழங்குதல், நியாயமான சம்பளத்தை உறுதி செய்தல் உள்ளிட்ட பல முக்கிய துறைகளில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

அவர்கள் நீண்ட காலமாக 1,750 ரூபாய் தினசரி சம்பளத்தை கோரி வருகின்றனர். இந்த ஆண்டுக்குள் அதை எப்படியாவது யதார்த்தமாக்க நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

மேலும், போதைப்பொருளை ஒழித்து பிள்ளைகளைப் பாதுகாக்க வேண்டும் என்பது மக்களின் கொள்கையாகும். அரசாங்கத்தால் மாத்திரம் இதனை செய்ய முடியாது. மாறாக, மக்களின் ஒத்துழைப்பும் அவசியமாகும். இதனை ஒழிப்பது ஆபத்தான விடயமாகவுள்ளது. பொலிஸார், இராணுவம், உள்ளிட்ட அனைத்துத் துறைகளுக்கும் இந்த விடயம் ஊடுருவியுள்ளது.

அரசியல்வாதிகளுக்கும் போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கும் தொடர்புள்ளது. இராணுவ ஆயுதங்கள் போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு செல்கிறது. இந்த விடயத்தை முறியடிக்கும் திட்டத்தை முன்கொண்டு செல்வோம். ஊழல் மோசடியும் எமது நாட்டில் வியாபித்துள்ளது. இதனையும் நிர்மூலமாக்க வேண்டும். எம்முடைய பொருளாதார வீழ்ச்சிக்கு ஊழலும் ஒரு முக்கிய காரணமாகவுள்ளது - என்றார். (ஐ)

## பிரம்படி...

நடைபெற்றது.

நினைவுத் தூபிக்கு பொதுச்சுடர் ஏற்றப் பட்டு, மலர் மாலை அணிவித்து மலர் தூவி இந்திய இராணுவத்தால் கொல்லப்பட்ட பொதுமக்கள் நினைவு கூரப்பட்டனர்.

இந்த நிகழ்வில், பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன், யாழ். மாநகர முன்னாள் முதல்வர் வி. மணிவண்ணன் நல்லூர் பிரதேச சபை உறுப்பினர்கள், படுகொலையானவர்களின் உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில், படுகொலையான மக்களின் நினைவாக பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்திய அமைதிப் படையினர் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக பவான் நடவடிக்கையை முன்னெடுத்தனர். இதன்போது, 1987 ஒக்ரோபர் 11, 12ஆம் திகதிகளில் பிரம்படிக்குள் நுழைந்த இந்திய படையினர் அப்பாவி பொதுமக்களை உயிருடனும் சுட்டுக் கொன்றவர்களின் உடல்களையும் வீதியில் படுக்கவைத்து கவச வாகனங்களால் ஏற்றி நசித்துக் கொன்றனர். இவ்வாறு சுமார் 50 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர். இந்திய இராணுவத்தினர் ஈழத்தில் நிகழ்த்திய முதலாவது படுகொலை இது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இந்திய...

வீட்டு பத்திரங்களை வழங்கும் நிகழ்வில் பங்கேற்றபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், இந்தியாவின் உதவியுடன் செயல்படும் இந்திய வீடமைப்பு திட்டத்தின் நான்காம் கட்டத்தின் இரண்டாம் கட்டம் தொடக்கி வைக்கப்படுகிறது. இது இந்தியா - இலங்கை உறவின் ஆழத்தையும் நட்பையும் பிரதிபலிக்கிறது. இரு நாடுகளும் இணைந்து மக்களின் வாழ்க்கை நலனையும் முன்னேற்றத்தையும் குறிக்கோளாகக் கொண்டு செயல்படுகின்றன.

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவும் இந்திய பிரதமர் நரேந்திர மோடியும் மேற்கொண்ட இரு தரப்பு முயற்சிகளால் இந்த உறவு மேலும் வலுப்பெற்றுள்ளது. அனைவருடனும் வளர்ச்சி என்ற மந்திரத்தின் கீழ் இந்தியா முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது. அதேபோல் இலங்கையும் “வேறு ஒரு நாடு, அழகான வாழ்க்கை” என்ற இலக்கை நோக்கி பயணிக்கிறது.

இது இரு நாடுகளின் வரலாற்று, கலாசார, சமூக பிணைப்புகளின் சின்னமாகும். இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி தமிழர்கள், இரு நாடுகளுக்கிடையிலான உறவின் பாலமாக இருந்து வருகின்றனர். அவர்கள் இலங்கையின் பொருளாதாரம், கல்வி, சமூக மேம்பாட்டில் முக்கிய பங்காற்றுகின்றனர்.

இந்திய அரசாங்கத்தின் ஆதரவில் இலங்கையின் 25 மாவட்டங்களிலும் மொத்தம் 65 ஆயிரம் வீடுகள், ரூ. 6 ஆயிரத்து 400 கோடி இலங்கை ரூபாய் மதிப்பில் கட்டப்படும். இது பல்லாயிரக்கணக்கான குடும்பங்களுக்கு பாதுகாப்பான இருப்பிடத்தையும் மேம்பட்ட வாழ்க்கையையும் அளிக்கும்.

வீடுகள் கட்டுவது மட்டுமல்ல - எதிர்காலத்தை கட்டுவதே இந்தியாவின் நோக்கம். கல்வி, சுகாதாரம், திறன் மேம்பாடு, சமூக உட்புகுத்தல் போன்ற துறைகளிலும் இந்தியா இலங்கையுடன் இணைந்து பணிபுரிகிறது.

இந்தியாவின் உதவி என்பது ஒரு நண்பனின் உதவியல்ல - ஒரு குடும்ப உறுப்பினரின் பொறுப்புணர்வு கொண்ட உதவியாகும். இந்திய பூர்வீக தமிழர் சமூகத்துக்கான ஆதரவு எப்போதும் தொடரும் - என்றார். (ஐ)

## “ரணிலுக்கு ஆதரவு இல்லை”

கொழும்பு, ஒக். 13

எதிர்வரும் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு பொதுஜன பெரமுன ஒரு போதும் ஆதரவளிக்காது. ரணிலை மீண்டும் தலைவராக தெரிவு செய்யவோ, வரவிருக்கும் தேர்தல்களில் அவரை வழிநடத்தவோ அல்லது ஆதரவளிக்கவோ எந்த எண்ணமும் இல்லை - இவ்வாறு பொதுஜன பெரமுனவின் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் கொள்கைகளுக்கும் பொதுஜன பெரமுனவின் கொள்கைகளுக்கும் இடையிலான இணக்கமின்மையே இதற்குக் காரணம்.

முன்னதாக ரணிலை ஜனாதிபதியாக்க ஆதரவளித்திருந்த நிலையில், பின்னர் கொள்கைகளில் வேறுபாடு காணப்பட்டது. இருப்பினும், தற்போதைய அரசாங்கத்தின் ஜனநாயக விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக எதிர்க்கட்சி அரசியல் கட்சிகளுடன் இணைந்து பொதுஜன பெரமுன செயல்படும் - என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ)

## வவுனியாவை....

தொலைத்தொடர்பு கம்பத்துடன் மோதி கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதன்போது, லொறியின் பின்புறத்தில் இருந்த இருவர் தூக்கி வீசப்பட்டு கவிழ்ந்த லொறியின் கீழ் அகப்பட்டனர்.

லொறியில் நசியுண்டு, படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்ட இருவரும் உடனடியாக நாரம்மல மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட போதிலும் உயிரிழந்தனர்.

இறந்தவர்கள் இருவரும் வவுனியா, நெடுங்கேணியை சேர்ந்த 26, 29 வயதுடையவர்களாவர்.

இந்த லொறியில் ஐவர் பயணித்திருந்தனர். லொறியின் சாரதியான முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பை சேர்ந்த 49 வயதான நபர் குருநாகல் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)

## கடல்....

வியனகமகே தெரிவித்துள்ளார்.

காங்கேசன்துறை கடற்படை முகாமில் நேற்று ஞாயிறுக்கிழமை நடத்திய விசேட ஊடக சந்திப்பின் போது, வலி. வடக்கில் ராடர் தளம் அமைப்பதற்காக பொதுமக்களின் காணிகளை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக வெளியான செய்தி தொடர்பில் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், கடல் கண்காணிப்பு மிக முக்கியமானது. அதற்கு மனித வலுவை மட்டும் பாவிக்க முடியாது. வளர்ந்து வரும் தொழில்நுட்பத்துக்கு ஏற்றவாறு நாமும் எம்மை மாற்ற வேண்டும்.

போர் முடிந்து விட்டது. அதனால் கடல் பாதுகாப்பு தேவையில்லை என கூற முடியாது. கடத்தல்களை கட்டுப்படுத்த மாத்திரமின்றி உள்ளூர் மீனவர்களின் பாதுகாப்புக்கும் ராடர்கள் மிக முக்கியமானவை. அவற்றின் மூலமே நாம் கடல் கண்காணிப்புகளை மேற்கொண்டு பாதுகாப்பு அளிக்க முடியும்.

மேலும், இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை கட்டுப்படுத்துவது எமக்கு சவாலானது. கடற்படை படகுகளுக்கான எரிபொருள் அதிகளவில் தேவைப்படும். அதனால் எரிபொருள் சிக்கல்களை எதிர்கொள்கிறோம்.

கடற்படையினர் ஒரு டோரா படகில் போனால் இந்திய மீனவர்கள் 50 - 100 படகுகளில் வருவார்கள். கடற்படையின் படகைக் கண்டதும் இந்திய எல்லைக்குள் ஓடி விடுவார்கள். எங்களால் துரத்திப் பிடிக்க முடிந்தளவு படகையும் மீனவர்களையும் கைது செய்கிறோம்.

எங்களால் மீனவர்களை கைது செய்ய மட்டும்தான் முடியும். கைது செய்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்த கடற்றொழில் நீரியல் வளத்துறையினரிடம் ஒப்படைப்போம். அதனை மட்டுமே கடற்படையால் செய்ய முடியும் - என்றும் கூறினார். (ஐ)

## ‘விண்டோஸ் 10’ முடிவுக்கு வருகிறது




நியூயோர்க், ஒக். 13

உலகம் முழுவதும் கோடிக்கணக்கானவர்கள் பயன்படுத்தும் விண்டோஸ் 10 நாளையுடன் முடிவுக்கு வருகிறது என்று மைக்ரோசொப்ட் நிறுவனம் அறிவித்துள்ளது.

2015ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட விண்டோஸ் 10இற்கான இலவச ஆதரவு நாளையுடன் நிறைவடைகிறது. இதற்கு பின்னர், விண்டோஸ் 10 இயங்கும் சாதனங்களுக்கு மிக முக்கியமான பாதுகாப்புப் புதுப்பிப்புகள், தொழில்நுட்ப திருத்தங்கள் அல்லது புதிய அம்சங்கள் எதுவும் கிடைக்காது.

ஆதரவு முடிந்த பிறகும் விண்டோஸ் 10 இயங்கினாலும் பாதுகாப்பு புதுப்பிப்புகள் இல்லாததால், அவை இணையத் தாக்குதல்களுக்கு இலக்காகக்கூடும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் மைக்ரோசொப்ட் நிறுவனம் பயனர்களை விண்டோஸ் 11இற்கு மேம்படுத்துமாறு வலியுறுத்தி வருகிறது. இருப்பினும், எல்லா கணினிகளும் அந்த மேம்பாட்டை மேற்கொள்ள முடியாது. இத்தகைய பயனர்கள் தொடர்ந்து பாதுகாப்பு பெற, லினக்ஸ் அல்லது குரோம், ஓ.எஸ். போன்ற மாற்று இயங்குதளங்களை பயன்படுத்துவது சிறந்தது என்றும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. (ஐ)

## நீக்கிய...

பிரச்னை. மீண்டும் பாதுகாப்பு வழங்கப்பட்டால், நாங்கள் வேண்டாம் என்று சொல்ல மாட்டோம். முன்னாள் ஜனாதிபதிகளுக்கு பாதுகாப்பு தேவை என்பதை இப்போது அவர்கள் புரிந்து கொள்கிறார்கள். ஒரு குழந்தைகூட அதைப் புரிந்து கொள்ளும் ”, என்றும் மேலும் கூறியுள்ளார். (ஐ)

## அரசாங்கத்துக்கு...

சிறிலங்கா சுதந்திர கட்சி சார்பில் நிமால் சிறிபால டி சில்வா, மகிந்த அமர வீர, துமிந்த திஸநாயக்க தரப்பும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன, தயாசிறி ஜயசேகர ஆகிய தரப்புகளும் இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்க என்று உறுதியளித்துள்ளன.

எதிர்வரும் நவம்பர் 11 ஆம் திகதி நுகேகொடையில் ஆரம்பமாகும் இந்த எதிர்ப்புப் பேரணியை நாடளாவிய ரீதியில் நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ரூ.110 கோடி....

ஈடுகட்டுவதாக இந்த நிதி கோரிக்கை கோரப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் ஆணையாளர் பணிமனையின்கீழ் செயல்படும் இந்தத் திட்டம் இலங்கையில் மனித உரிமை மீறல்கள் அல்லது சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் கடுமையான மீறல்களுக்கான எதிர்கால பொறுப்புக்கூறல் செயல்முறைகளுக்கு, ஆதாரங்களை சேகரிக்கும் பொறிமுறையாகும்.

ஜெனிவாவை தளமாகக் கொண்ட இந்தப் பொறுப்புக்கூறல் திட்டம் 2021இல் ஐக்கிய நாடுகள் பேரவையின் தீர்மானத்தின் கீழ் அமைக்கப்பட்டது.

அத்துடன், 2025 ஒக்ரோபர் 6 அன்று இலங்கைமீதான புதிய தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து இந்தத் திட்டத்தின் ஆணை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டுள்ளது. எனினும், இந்தப் பொறிமுறையை இலங்கையின் அரசாங்கங்கள் தொடர்ந்தும் நிராகரித்து வருகின்றன. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# கச்சதீவில் தஞ்சமடையும் போராட்டத்தை நடத்துவோம்

## தமிழ்நாடு மீனவர்கள் அறிவிப்பு

இராமேஸ்வரம், ஒக். 13

இராமேஸ்வரத்தில் உள்ள அனைத்து மீனவ குடும்பத்தினர் படகுகளில் சென்று கச்சதீவில் தஞ்சமடையும் போராட்டம் நடத்தவுள்ளோம் என்று இந்திய மீனவர்கள் எச்சரித்துள்ளனர்.

இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டமையை கண்டித்து இராமேஸ்வரத்தில் நேற்றுமுன்தினம் போராட்டம் நடைபெற்றது. இந்தப் போராட்டத்தின்போது கருத்து வெளியிட்ட தமிழக விசைப்படகு மீனவர் சங்க மாவட்ட ஒருங்கிணைப்பாளர் யேசுராஜா,

"நடுக்கடலில் இலங்கை கடற்படையால் மீனவர்கள் தாக்கப்படுவதும், கைது செய்யப்படுவதும் அதிகரித்துள்ளது.

இலங்கை சிறையில் தவிக்கும் மீனவர்கள் மற்றும் அவர்களின் படகுகளை விடுவிக்கக் கோரியும் பாரம்பரிய கடல் பகுதியில் இலங்கை கடற்படை பிரச்னையின்றி மீன்பிடிக்க நடவடிக்கையை எடுக்க வலியுறுத்தியும் அடுத்தக்கட்ட போராட்டத்தை நடத்த உள்ளோம்.



இராமேஸ்வரத்தில் உள்ள அனைத்து மீனவ குடும்பத்தினர் படகுகளில் சென்று கச்சதீவில் தஞ்சமடையும் போராட்டம் நடத்தவுள்ளோம். விரைவில் அதற்கான திகதி அறிவிக்கப்படும் - என்றார்.

## கொழும்பு மாநகர சபையில் ரூ. 400 கோடி வரி நிலுவையில்

கொழும்பு, ஒக். 13

கொழும்பு மாநகர சபையில் ரூ. 400 கோடிக்கும் அதிகமான மதிப்பீட்டு வரி நிலுவையில் உள்ளதாக கோபா குழு தெரிவித்துள்ளது.

சமீபத்தில் கொழும்பு மாநகர சபை அதிகாரிகள் கோபா குழுவில் முன்னிலையானபோதே இந்தத் தகவல் தெரியவந்துள்ளது.

இதன்படி, முன்னர் பரிந்துரைகள் வழங்கப்பட்ட போதிலும் வரி கடனை மீட்கும் பணிகளில் சிறிய முன்னேற்றம் காணப்படுவதாகக் குறித்த குழுவின் தலைவர் கபீர் ஹாசிம் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக, கோட்டை பிரிவில் மாத்திரம் நிலுவையிலிருந்த ரூ.61 கோடி தொகையில், ஜூன் மாதத்துக்குள் ரூ. 5.3 கோடி மட்டுமே வசூலிக்கப்பட்டுள்ளது என்றும் கபீர் ஹாசிம் தெரிவித்துள்ளார்.

மேலும், மாநகர சபை பிரதி பொருளாளர் நந்தன ராஜபக்‌ஷ பேசுகையில், கடனை செலுத்தத் தவறியவர்களுக்கு எதிராக சொத்துக்களைப் பறிமுதல் செய்வது உள்ளிட்ட நகர சபை கட்டளைச் சட்டத்தின் கீழ் மீட்பு முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது - என்றார். (ஐ)

## பிள்ளைகளிடம் பராமரிப்பு கோரி 200 முதியவர்கள் முறைப்பாடு!

கொழும்பு, ஒக். 13

பிள்ளைகளிடமிருந்து பராமரிப்பு கோரி 200இற்கும் மேற்பட்ட முதியவர்கள் முறைப்பாடு செய்துள்ளனர் என்று முதியோர்களுக்கான தேசிய செயலகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில், அறிமுகப்படுத்தப்பட்ட வட்ஸ் அப் இலக்கத்துக்கே இந்த முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. 070 789 8889 எனும் வட்ஸ்அப் இலக்கத்தின் ஊடாக சரண உதவி சேவையை தொடர்புகொள்ள முடியும் என்று செயலகத்தின் பணிப்பாளர் சத்துர மிஹிதும் கூறியுள்ளார்.

முறைப்பாடுகளை பரிசீலிப்பதற்காக பராமரிப்பு சபை ஒன்று புதிதாக உருவாக்கப்பட்டுள்ளது. முறைப்பாடுகளை சமர்ப்பித்தவர்களுடன் விரைவில் பிரதேச செயலக பணிமனைகளில் இருந்து ஒன்லைன் ஊடாக தொடர்புகொள்ள திட்டமிட்டுள்ளதாகவும் முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் பணிப்பாளர் சத்துர மிஹிதும் மேலும் தெரிவித்தார்.

## விசேட சிறையில் தடுத்துவைக்க உத்தரவிடுவதை தவிர்க்கவும்!

### நீதிவான்களிடம் வலியுறுத்து

கொழும்பு, ஒக். 13

எந்தவொரு சந்தேகநபரையும் அல்லது கைதியையும் விசேட சிறையில் தடுத்து வைக்குமாறு நீதிவான்கள் உத்தரவிடுவதை தவிர்க்க வேண்டும் என்று வலியுறுத்தி நீதிச்சேவை ஆணைக்குழு அறிக்கை வெளியிட்டுள்ளது.

நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் பிரசன்ன அல்விஸின் கையெழுத்துடன் நீதித்துறை அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ள சுற்றறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

நீதிபதிகளின் உத்தரவின் பேரில் சந்தேகநபர்கள் அல்லது கைதிகள் பிரத்தியேக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கு அமைய இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

அத்துடன், எந்தவொரு சந்தேகநபர் அல்லது கைதிக்கு விசேட பாதுகாப்பு வழங்க நீதிபதிகள் உத்தரவிடக் கூடாதெனவும் அறிக்கையில் குறிப்பிடப்பட் டுள்ளது. (ஐ)

## "வீட்டு ஆவணங்களல்ல வெறும் காகித தாள்களே"

கொழும்பு, ஒக். 14

"அரசாங்கத்தால் வழங்கப்பட்ட வீட்டு ஆவண பத்திரங்கள் வெறும் காகிதத் தாள்களை வழங்கும் ஒரு விளம்பர நிகழ்ச்சி மாத்திரமே", என்று பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

மலையகத்தைச் சேர்ந்த 2 ஆயிரம் பேருக்கு நேற்றைய தினம் வீட்டு உறுதிப்பத்திரம் வழங்கும் நிகழ்வு பண்டாரவளையில் நடைபெற்றது. இது தொடர்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

## சதொசவில் 850 ஊழியர்களின் நியமனம் தொடர்பில் சர்ச்சை!

கொழும்பு, ஒக். 13

கடந்த ஆண்டு தேர்தலுக்கு முன்னர் லங்கா சதொசவின் 850 ஊழியர்கள் சர்ச்சைக்குரிய வகையில் பணியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளனர் என்று அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய (கோப்) குழுவில் தெரியவந்துள்ளது.

லங்கா சதொச அதிகாரிகள், கோப் குழுவில் முன்னிலையானபோதே இந்த விடயம் தெரியவந்துள்ளது.

இதன்படி, சதொசவில் 8 சிரேஷ்ட பதவிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளது என்று அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் நிஷாந்த சமரவீர சுட்டிக்காட்டினார்.

2024 செப்ரெம்பரில் 2 ஆண்டுகளுக்கு வழங்கப்பட்ட ஒப்பந்தம் 5 ஆண்டுகளாக நீடிக்கப்பட்டது என்று சதொச தலைவர் சமித பெரேரா தெரிவித்துள்ளார். அத்துடன், நிவாரண பொதிகளிலும் பல்வேறு சிக்கல்கள் காணப்பட்டன என்றும் அவர் கூறினார். (ஐ)

## மித்தெனிய முக்கொலையில் மன்னம்பேரிக்கும் தொடர்பு!

கொழும்பு, ஒக். 13

மித்தெனியவில் அருண விதானகமகே என்ற கஜ்ஜாவும் அவரின் பிள்ளைகள் இருவரும் படுகொலை செய்யப்பட்ட வழக்கில், பிரதான சந்தேகநபரான திட்டமிட்ட குற்றக்குழு உறுப்பினர் பெக்கோ சமனின் நெருங்கிய சகாவான சம்பத் மன்னம்பேரிக்கு நேரடி தொடர்பு உள்ளமை பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

கஜ்ஜாவை சுட்டுக் கொன்றார் என்று கூறப்படும் துப்பாக்கிதாரியான ரொஷான் மற்றும் சம்பத் மன்னம்பேரி ஆகியோர் நெருங்கிய நண்பர்கள் எனவும் சம்பத் மன்னம்பேரியின் தனிப்பட்ட வேலைகளிலும் ரொஷான் உதவியுள்ளார் என்பதும் விசாரணையில் உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

கஜ்ஜாவை கொல்ல ஒற்றறிய உதவிய ஜீவன் என்பவர், ஒரு காலத்தில் சம்பத் மன்னம்பேரிக்கு சொந்தமான பேருந்தில் பணியாற்றியவர் என்றும் தெரியவந்துள்ளது.

இந்தக் கொலைக்கு பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் பெக்கோ சமனுக்குச் சொந்தமான துப்பாக்கியை, கொலை நடப்பதற்கு சில நாட்களுக்கு முன்பு சம்பத் மன்னம்பேரி ஒருவரிடம் கொடுத்தமையும் அம்பலமாகியிருந்தது.

மித்தெனியவில் கண்டுபிடிக்கப்பட்ட ஐஸ் போதைப்பொருள் உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் இரசாயன பொருட்களை மறைப்பதிலும் சம்பத் மன்னம்பேரி முக்கிய பங்காற்றியுள்ளார்.

இந்த இரசாயன பொருட்களை ஏற்றி வந்த கொள்கலன்களை மறைப்பதற்காக, சம்பத் மன்னம்பேரியின் சகோதரியினது வீட்டைச் சுற்றி ஒரு உயரமான மதில் கட்டப்பட்டிருப்பதும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

மேல் மாகாண வடக்கு குற்றத் தடுப்பு பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ள பெக்கோ சமன், சம்பத் மன்னம்பேரி ஆகியோரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளில் போதைப்பொருள் கடத்தல் மற்றும் பிற குற்றங்கள் குறித்து பல முக்கிய தகவல்கள் கிடைத்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

## ஐந்தாவது கட்ட கடன் வசதி: நிதியை விடுவிக்க ஐ.எம்.எவ். இரு நிபந்தனைகள் விதிப்பு!

கொழும்பு, ஒக். 13

சர்வதேச நாணய நிதியத்தின் நீட்டிக்கப்பட்ட நிதி வசதி திட்டத் தின் கீழ் ஐந்தாவது ஆய்வை நிறைவு செய்து நிதியை விடுவிக்க இலங்கை இரண்டு முக்கிய நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும் என்று நாணய நிதியம் வலியுறுத்தியுள்ளது.

ஐந்தாவது தவணையாக 34.7 கோடி அமெரிக்க டொலர்கள் நிதியை பெறுவதற்காக, சர்வதேச நாணய நிதியத்தின் கடன் திட்டத்தின் அளவீடுகளுக்கு இணங்க, 2026ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்தை தயாரித்து பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டும்.

அத்துடன், கடன் மறுசீரமைப் பில் போதுமான முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு பல தரப்பு பங்காளிகளின் நிதி பங்களிப்புகள் பாதுகாக்கப்படுவதையும் நிதி உத்த ரவாதங்களின் மதிப்பாய்வு நிறைவடைவதையும் இலங்கை உறுதி செய்ய வேண்டும் - என்ற நிபந்தனைகளை விதித்துள்ளது.

இந்த இரு நிபந்தணைகளும் நிறைவேற்றப்பட்ட பின்னர் நிறைவேற்றுக் குழுவின் ஒப்புதலுக்காக இந்த மதிப்பாய்வு சமர்ப்பிக்கப்படும்.

இதே சமயம், கடன் மறுசீர மைப்பு பேச்சுகளை விரைவாக முடித்து, நிதி உத்தரவாதங்களை உறுதிப்படுத்துவது என்பது பன்னாட்டு பங்காளிகளிடம் தங்கியுள்ள ஒரு கடினமான இராஜதந்திர பணியாகும்.

மறுபுறம் இரண்டு நிபந்தனை களையும் பூர்த்தி செய்வதே, இலங்கையின் பொருளாதார மீட்சிக்கான அடுத்த படிக்கு அத்தியாவசியமாகும். நவம்பர் 7 ஆம் திகதி வரவு - செலவுத் திட்டத்தை அரசாங்கம் சமர்பிக்க உள்ள நிலை யில் இந்த இரு நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## யானைகள் உயிரிழப்பு நாட்டில் அதிகரிப்பு!

கொழும்பு, ஒக். 13

நாடளாவிய ரீதியில் பல்வேறு காரணங்களால் யானைகள் உயிரிழக்கும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இந்நிலையில், நேற்றைய தினமும் பொலநறுவை - வெலிகந்த பகுதியில் காட்டு யானை ஒன்று உயிரிழந்தது.

பாதுகாப்புக்காக அமைக்கப்பட்டிருந்த சட்டவிரோத மின்சார வேலியில் சிக்குண்டே குறித்த யானை உயிரிழந்தது.மின்சார வேலியை அமைத்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதனிடையே, அநுராதபுரம் - கல்கிரியாகம பகுதியில் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கான யானை ஒன்று காயமடைந்துள்ளது.

குறித்த யானையின் தலையில் பல்வேறு துப்பாக்கிச்சூட்டு காயங்கள் காணப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## மொரககஹகந்தையில் நேற்று விசேட சோதனை

கொழும்பு, ஒக். 13

மாத்தளை - மொரகஹகந்தை நீர்த்தேக்கத்தை சுற்றியுள்ள பகுதிகளில் நேற்று விசேட சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

நீர்த்தேக்கத்தை அண்மித்துள்ள பகுதியிலிருந்து ஒருதொகை தோட்டாக்கள் கைப்பற்றப்பட்டதையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்தப் பகுதியிலிருந்து பல்வேறு வகையான 448 தோட்டாக்கள் கைப்பற்றப்பட்டிருந்தன நேற்று முன்தினம் மீட்கப்பட்டிருந்தன. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 13.10.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org